# பதினோராவது கட்டளை



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

தலைப்பு: பதினோராவது கட்டளை
(The Eleventh Commandment)

---

## அத்தியாயம் 1 – அன்பு வெளிகாண்பிக்கப்படுகையில்

1. மாலை வணக்கம் நண்பர்களே. நான் இன்றிரவு "அன்பு வெளிப்பட விடுகையில், கிருபையானது பொறுப் பேற்றுக் கொள்கிறது'' என்ற பொருளின் பேரில் உங்களிடம் பேச விரும்புகிறேன். பரி. யோவான், 3ஆம் அதிகாரம், 16வது வசனத்திலிருந்து என்னுடைய பொருளை எடுக்கின்றேன்: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்

நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' இந்த வேத வசனம் அன்பைக் குறித்து குறிப்பிடுகின்றது. தேவனுடைய கிறிஸ்தவ அன்பை எட்டும் வகையில் எந்த ஒரு வல்லமையோ அல்லது போதகமோ, அல்லது ஒழுங்கு முறையோ இல்லை என்பதை நாம் அறிவோம். தேவனுடைய அன்பை விளக்க எத்தனையோ பேர்கள் முயற்சித்திருந்தாலும், யாராலும் அதை விளக்கவே முடியாது. கவிஞர்களும், பாடலாசிரியர்களும் முயற்சி செய்து தோற்றுப் போயினர். ஆகவே நாங்கள், போதகர்கள் என்ற முறையில் தேவனுடைய அன்பை பிரசங்கிக்கின்றோம். ஆனால் அவருடைய வியக்கத்தக்க அன்பை எங்களாலே முழுவதுமாக விளக்க இயலாது. தேவனுடைய

அன்பைக் குறித்து ஒரு கவிஞன் இவ்வாறு எழுதியுள்ளான்:

**கடல் எல்லாம் மையினால் நிறைந்து,**

**வானத்தை தோல் காகிதமாக உபயோகித்து**

**பூமியிலுள்ள ஒவ்வொரு தண்டையும் இறகாக உபயோகித்து**

**ஒவ்வொரு மனிதனையும் எழுதும் தொழிலில் அமர்த்தினால்**

**தேவனுடைய அன்பை எழுதுவதென்பது கடலை உலரச் செய்து விடும்**

**வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை படர்ந்துள்ள தோல் சுருள்**

**தேவனுடைய அன்பு அனைத்தையும் கொள்ளுமா.**

நான் எப்பொழுதும் அந்த மகத்தான கவிஞன் பற்றி நினைவுக் கொள்வதுண்டு:

**காயங்களிலிருந்து பெருக்கெடுத்து வந்த அந்த நதியை நான்**

**விசுவாசத்தில் கண்டமுதற்கு**

**மீட்கும் அன்பே என் சிந்தனையாயுள்ளது**

**நான் மரிக்கும் வரைக்கும் அது அவ்வாறிருக்கும்**

2. தேவனுடைய இந்த மகத்தான உலகளாவிய சபைக்கு இன்றிரவு தேவைப் படுகின்ற ஒரு காரியமொன்று இருக்கு

மென்றால், அது அன்புதான் என்று நான் நினைக்கிறேன். இந்த நம்முடைய வரங்களும், மற்றும் நம்முடைய உணர்ச்சிவசப் படுதல்களும், எவ்வளவாக நாம் நினைக்கும் அளவிற்கு நாம் செய்தாலும் நமக்கு அவை தேவை இல்லை, அவை மிகவும் அற்புதமானவைதான். அவைகளுக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம் - ஆனால் அந்த வரங்கள் அன்பினால் ஆளுகை செய்யப்படவில்லை என்றால் அவை பயனுள்ளதாக இருக்காது.

அன்பு ஒரு வீட்டை ஆளுகை செய்ய வேண்டும் - அன்பினால் ஒழுங்கு முறை செய்யப்படாத ஒரு வீடானது ஒரு முழுமையான வீடல்ல. ஒரு புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மனப் பூர்வமாக அன்பு கூறவில்லை என்றால், அவர்களால் ஒருவர் பேரில் ஒருவர்

நம்பிக்கைக் கொள்ள முடியாது. நினைவில் கொள்ளுங்கள், உலகத்தில் இருப்பதி லேயே மிக பலமான சக்தி அன்பு தான் - ஏதோ ஒரு உணர்ச்சி வசப்படுதல் மேல் அல்லது ஏதோ ஒரு வரத்தின் பேரில் சத்தமிடுதல் அல்லது அந்நிய பாஷையில் பேசுதல் இன்னும் பல, போன்றவை. நம்முடைய விசுவாசத்தை வைப் பதற்கு பதிலாக, (அது சரி தான்) நாம் நம்முடைய விசுவாசத்தை தேவனுடைய அன்பின் மேலேயே வைக்க வேண்டும். நாம் இக் கொள்கைக்குத் தான் திரும்பி வரவேண் டும், அது.. முதலில் அன்பு செலுத்தி, அதன் பிறகுதான் மற்ற பிற காரியங்களைச் செய்தல். இதை நாம் செய்வோமானால் நம்முடைய சபைகள் மிக வேகமாக முன்னேறும் - ஏனெனில் தேவன் அன் பாகவே இருக்கிறார்.

3. இப்பொழுது அன்புக்கு இரண்டு வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளன, அதை விளக்க இரண்டு வெவ்வேறு வார்த்தைகள் இருக்கின்றன. கிரேக்க மொழியில் அன்பின் ஒரு சொல்லானது "பிலீயோ' (phileo) என்று கூறப்படுகின்றது, அது, நீங்கள் உங்கள் மனைவியிடம் கொண் டுள்ள மாம்ச பிரகாரமான அன்பு; ஆனால் "அகாபோ'' (agapao) என்றால் தெய்வீக அன்பு என்பதே - இந்த இரண்டு அன்பு களும் ஒன்றுக்கொன்று மிக முரண்பாடாக காணப்படுகின்றது. உதாரணத்திற்கு ஒரு மனிதன் உங்கள் மனைவியை நிந்தித்தால், நீங்கள் உங்கள் மனைவியின் பேரில் வைத்துள்ள அன்பின் காரணமாக, அந்த இடத்திலேயே அவனைக் கொன்று விடு வீர்கள் - அது “பீலியோ, " மாம்ச பிரகார மான அன்பு; ஆனால் 'அகாபோ'' அன்பு

அல்லது தெய்வீக அன்பைக் கொண்டிருப் பீர்களானால், அந்த மனிதனுடைய இழக்கப்பட்டிருக்கின்ற ஆத்துமாவிற்காக நீங்கள் ஜெபம் செய்வீர்கள். அதுதான் வித்தியாசம். நம்மில் அநேகர் நாம் 'பீலீயோ', மாம்சபிரகாரமான அன்பை உடையவர்களாயிருந்து, அது அகாபோ'' அன்பு தான் என்று நினைத்துக் கொண் டிருப்பதால், நாம் ஏமாற்றப்பட்டிருக் கிறோம். "பிலீயோ" அன்பு அறிவுப்பிர காரமானதாய் இருக்கின்றது, ஆனால் ''அகாபோ'' அன்போ இருதயத்திலிருந்து வருகின்றது. மானிட அன்பு அல்லது பாச முள்ள அன்பு மனதிலிருந்து வருகின்றது. தேவனுடைய அன்போ இருதயத்திலிருந்து வருகின்றது. இப்பொழுது "பிலீயோ'' அன்பு எப்பொழுதுமே சந்தேகம் மற்றும் நிச்சயமற்றதாக, கேள்வியையுடையதாக

இருக்கும், ஆனால் ''அகாபே'' அன்பானது எப்பொழுதுமே இளைப்பாறிக் கொண்டும், சமாதானத்துடனும் இருக்கும். மானிட அன்பானது எப்பொழுதுமே விவாதித்துக் கொண்டேயிருக்கும் ..... தேவ அன்பானது அவ்விதமாக செய்யவே செய்யாது. தேவ அன்பானது அநேகமாக அதன் நம்பிக்கையுள்ளதாகவே இருக்கும், நீங்கள் உண்மையாகவே தேவனுடைய அன்போடு அன்பு கூருவீர்களானால் அது விசுவாசத்தை பிறப்பிக்கின்றது.

இன்றிரவு இங்கிருக்கிறவர்கள் அநேகர், "அப்படியானால் வேதாகமத்தின் அந்த சிறிய வசனத்தை மாத்திரமே நீங்கள் வாசிக்கப் போகிறீர்களா, அவ்வளவு தானா?'', என்று கூறலாம். ஓ, ஆனால் என் நண்பர்களே, வேதத்தின் இந்த சிறு வசனத்தில், உங்களை என்றும் நரகத்திற்கு

பாத்திரமாக ஆக்கினைக்குட்படுத்த போது மானது இருக்கிறது. இந்த சிறிய வேத வசனத்தின் பேரில் நீங்கள் கொண் டிருக்கின்ற நோக்கமானது, உங்கள் நித்திய சேருமிடத்தை முத்தரிக்கின்றது, ஆகவே இப்பொழுது நாம் அந்த வேத வசனத்தின் பேரில் சிறிது நேரம் தியானிப்போமாக.

இந்த வேத வசனம் சிறியதாக இருப் பது போல் ..... நாம் இந்த வாழ்க்கையில் செய்கின்ற அநேக சிறிய காரியங்கள் இருக்கின்றன.... ஆனால் என் நாமத்தி னிமித்தம் ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீர் நீங்கள் கொடுத்தால் உங்களுக்கு பல னளிக்கப்படும் என்று இயேசு கூறினார். நாம் செய்கின்ற சிறு காரியங்களையும் அவர் காண்கிறார் என்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். அன்பு ஒரு வல்லமை பொருந்திய சக்தியாகும்,

அன்பானது வெளிப்படுத்திக் காண்பிக்கப் படுகையில், அது தன்னு டைய பலத்தின் கடைசி முனைக்கு வருகையில், அப்பொ ழுது எல்லையற்ற கிருபையானது அந்த இடத்திலிருந்து அதை எடுத்துக் கொண்டு, அன்பானது எதைக் கேட்டதோ அந்த காரியத்தை அளிக்கின்றது. அதன் காரண மாகத்தான் இன்றிரவு நாம் ஒரு இரட்சகரைக் கொண்டுள்ளோம். தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார், அவருடைய அன்பானது உலகத்தை நோக்கி செலுத்தப்பட்டதால் ஒரு இரட்சகர் பிறப்பிக்கப்பட ஏதுவானது. நீ மிகவும் நலமாக காணப்பட வேண்டும் என்று தேவன் மிகவுமாக விரும்பியதால் தான் அவருடைய அன்பானது புறப்பட்டு சென்று உன்னுடைய வியாதிக்காகவும் மற்றும் உன்னுடைய பாவங்களுக்காகவும்

ஒரு பாவநிவிர்த்தியை உண்டாக்கினது. அதை அவர் செய்யும்படியாக துரிதப் படுத்தினது தேவனுடைய அன்பே ஆகும். அன்பைக் காட்டிலும் மற்றெதுவும் சிறந்தது அல்ல.... அது நம்பிக்கையை அளிக்கிறது. அது விசுவாசத்தை அளிக்கிறது, அது மன்னிப்பை அளிக்கிறது. அன்புக்கு பயம் கிடையாது, அன்பு பயத்தை புறம்பே தள்ளுகிறது. கிறிஸ்தவர்கள் மத்தியில் பயம் அதிகமாக இருப்பதை நான் காண்கிறேன், அது சரியல்ல அவ்விதமாக அது இருக்கக் கூடாது. நம்பிக்கை இல்லா திருப்பதால் தான் பயம் வருகின்றது, ஆனால் நீங்கள் அன்பு செலுத்தி நம்பிக் கையைக் கொண்டிருந்தால் நீங்கள் பயத்தை புறம்பே தள்ளிவிடுவீர்கள். நீங்கள் அவரிடத்தில் அன்பும் நம்பிக் கையையும் கொண்டிருக்க வேண்டுமென்று

தேவன் விரும்புகின்றார்.... அப்படிச் செய் கையில் அது உங்கள் பயங்களைப் புறம்பே தள்ளி நீங்கள் அவருக்கு மிகுதி யான அன்புடன் சேவை செய்ய உங் களைக் கொண்டு வருகிறது.

அன்பு நாம் கொண்டிருக்கின்ற சட்டத் தின்படியான பிரமாணங்களைச் சார்ந்து இல்லை, அன்பானது நாம் ஒருவர் பேரில் ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கை, தேவ னிடத்தில் விசுவாசமாயிருப்பது, தேவ னிடத்தில் நம்பிக்கையாயிருப்பது, தேவ னிடத்தில் உறுதியான நம்பிக்கை கொண் டிருப்பது என்பவைகளின் பேரில் தான் அன்பானது சார்ந்திருக்கிறது. நண்பர்களே நான் உங்களுக்கு கூறுவதாவது, தேவ னுடைய அன்பானது உங்கள் இருதயத் திற்குள் வந்துவிடுகையில் நீங்கள் எவரை யும் துன்புறுத்த மாட்டீர்கள், அல்லது

துன்புறுத்திக் கொள்ள மாட்டீர்கள். நீங்கள் தேவனை விசுவாசிக்கையில், அவரை உண்மையாக விசுவாசித்து, அவரை விவாகம் செய்து கொள்ளத்தக்கதாக வந்து, உலகத்தின் காரியங்களுக்கு நீங்கள் மரிக் கிறீர்கள். அப்பொழுது தேவன் தம்முடைய அன்பை செலுத்துகிறார், அவருடைய அன்பானது நீங்கள் எவ்விதமாக இருக்க வேண்டுமோ அவ்விதமாக இருக்க அது செய்துவிடும்.

4. அன்பைக் குறித்ததான என்னுடைய சில அனுபவங்களைக் குறித்த ஒரு தனிப்பட்ட சாட்சியை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்: மக்கள் நினைப்பது போல என் வாழ்க்கை தெய்வத் திற னுடைய ஒன்றல்ல, அவ்வாறு இல்லை, அது அன்பு ஆகும், அது தான் முக்கிய மான காரியமாகும், அது கிறிஸ்துவை

நேசிப்பதாகும். அப்படி செய்யலாம் என்று கூறுவதல்ல, ஆனால் உங்கள் இருதயத்தி லிருந்து அவரை அன்பு கூர்தல். தேவ னுடைய அன்பின் பிரசன்னத்தில் மிகவும் கொடியதான பிசாசுகள் கீழ்ப்படுத்தப் பட்டதை நான் கண்டிருக்கிறேன், துஷ்ட மிருகங்கள் அப்படியே படுத்துக்கொள் வதை நான் கண்டிருக்கிறேன். அன்பு பயத்தை புறம்பேதள்ளும்.

அந்த இரவில் ஓரிகானிலுள்ள போர்ட் லாண்டில், அந்த வெறிப்பிடித்த மனிதன் என்னை எதிர்த்து நின்று, என் மீது எச்சிலை துப்பி என்னை சபித்ததை இன்றிரவு இங்கிருக்கின்ற உங்களில் சிலருக்கு நினை விருக்கலாம். அநேக மேய்ப்பர்கள் பிரசங்க மேடையிலிருந்து ஓடி விட்டனர். அவர்கள் அவனிடம் அதிக பயம் கொண் டிருந்தனர். அங்கிருந்த சிலர், காவல்

துறையினர் அழைக்கப்பட வேண்டு மென்றும், அந்த மனிதனை வலுக்கட் டாயமாக அடக்கி அவனை கயிற்றால் கட்டி மறுபடியும் அவனை சிறைக்குள் அடைக்க வேண்டும் என்று நினைத்தனர். நான் அந்த மனிதனை வெறுப்பதற்குப் பதிலாக அவனை நேசித்தேன். 'அந்த பரிதாப மனிதன் என்னைக் காயப்படுத்த வேண்டும் என்று விரும்பவில்லை..... அது அந்த மனிதனுக்குள்ளிருக்கும் பிசாசு, அந்த பிசாசு தான் என்னை காயப்படுத்த விரும்புகிறான். ''அந்த மனிதன் ஒரு நேசிக்கின்ற குடுப்பத்தையுடையவனாக இருக்கலாம், ஒன்று சேர்ந்து உணவு சாப்பிட, மற்றும் ஒரு நல்ல குடிமகனா யிருக்க விரும்புகிறவனாக இருக்கலாம். ஆனால் அவனுக்குள்ளிருக்கும் பிசாசு தான் இதைச் செய்கிறது'' என்று நான்

நினைத்தேன். நான் பாவம், அந்த சகோதரன்!'' என்று நினைத்தேன். அவன் என்னிடமாக அருகில் வந்து, "நீ தேவ னுடைய மனிதனா அல்லது இல்லையா என்று நான் உனக்கு காண்பிக்கப் போகிறேன்!'' என்று கூறினான். நல்லது, நான் ஒன்றுமே கூறவில்லை, நான் அவனை நோக்கிப் பார்த்து கொண் டிருந்தேன், அவ்வளவுதான். அந்த இடம் மிகவும் அமைதியாக இருந்தது, அப்பொ ழுது அந்த மனிதன், "புல்லில் இருக்கும் பாம்பே!'' என்றான். நான் ஒன்றுமே கூறவில்லை, ஆனால் இதை நினைவில் கொள்ளுங்கள், நான் பயப்படவேயில்லை. ஏனெனில் நான் அங்கே தேவனுடைய அன்பைக் கொண்டவனாக அவனைச் சந் தித்தேன். அப்பொழுது அவன் என்னைத் தாக்க தன் கைமுட்டியை உயர்த்தின

போது, நான், "சாத்தானே, அந்த மனிதனை விட்டு வெளியே வா'' என்றேன், அப் பொழுது அவன் சுற்றிச் சுழன்று முகங் குப்புற விழுந்து, என் பாதம் அப்படியே தரையிலே அசையாதபடிக்குப் அவன் அதைப் பிடித்துக் கொண்டான். என் நண்பர்களே பயப்படாதேயுங்கள், அதற் குப் பதிலாக அன்பை செலுத்துங்கள். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நீ உரிமை கொண்டிருக்கிற நிலத்தின் ஒவ் வொரு அங்குலத்தையும் நீ நிருபிக் கத்தக்கதாக பிசாசு உனக்குச் செய்வான், ஆனால் நீ தேவனை நேசிப்பாயானால் பயம் என்பதே உனக்கு இருக்காது, நீ எதை விசுவாசிக்கின்றாயோ அதன் பேரில் நிற்க முடியும், நீ தோற்கடிக்கப்படவே முடியாது.

5. இதை நான் நினைவுகூருகிறேன்: கடந்த வருடத்தில் மெக்சிகோவில்,

ஜனக்கூட்டத்திற்கு இடமளித்து கூட்டத்தை நடத்த எந்த இடமும் எங்களுக்கு கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது, ஆகவே கூட்டங்களுக்கு வந்த மக்கள் எல்லாரும் ஒரு திறந்த வெளியில் ஒன்று கூட வேண்டியதாயிருந்தது. உட்கார நாற் காலிகள் கிடையாது, தேவனுடைய வார்த் தையைக் கேட்க ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து கொண்டிருந்தனர்... இளம் வய தினர் மற்றும் வயதானவர்கள் மற்றும் கூட்டத்திற்கு வரும்படியாக நாள் முழு வதுமாக நடந்து வந்து மிகவும் களைப் புற்றிருந்த சிலர் அப்படியே நின்று கொண்டிருந்தனர். அந்த குளிரில் அவர்கள் நின்று கொண்டிருப்பதை நான் கண்டேன். அவர்கள் எவ்வளவாக கர்த்தரை நேசித் திருக்க வேண்டும்!'' என்று நான் நினைத் தேன். நியாயத்தீர்ப்பின் நாளிலே இந்த

ஜனங்கள் சபை அங்கத்தினர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களாகிய, இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தில் கதவுகளை ஒழுங்காகக் கூட இருக்க விடாதவர்க ளுக்கு எதிராக எப்படி நிற்கப் போகி றார்கள் தெரியுமா. ஒரு இரவிலே கூட்ட மானது முடியவிருக்கும் நேரத்தில் மழை மிக பலமாகப் பொழிய ஆரம்பித்தது, ஜனத்திரளின் மத்தியில் ஒரு பெரிய அமளி ஏற்பட்டது, நாங்களெல்லாலரும் முற்றி லும் நனைந்து நிலையில் ஈரத்துடன் மழையில் நின்றுக் கொண்டிருந்தோம்.

என் மகன் பில்லி பால் என்னிடமாக வந்து அப்பா, அங்கே ஜனக்கூட்டத்தில் ஒரு தாயானவள் இருக்கின்றாள், அவளு டைய குழந்தை மரித்திருக்கிறது, அவள் வாயிற்காப்போன்களை முட்டித் தள்ளிக் கொண்டு உங்களிடம் வரவேண்டுமென்று

மிக கடுமையாக சத்தமிட்டுக் கொண் டிருக்கிறாள். எங்களால் அவளைக் கட்டுப் படுத்தவே முடியாத அளவிற்குப் போராடிக் கொண்டிருக்கிறாள்'' என்றான். நான், "நீ சகோ. மூரிடம், சென்று அவ ளிடத்திற்கு போய் ஜெபம் செய்யும்படிக்கு கூறு'' என்று கூறினேன். சகோதரன் மூர் ஜனக்கூட்டத்திற்குள்ளாக சென்றார். அந்த நேரத்தில் மற்ற எல்லாரையும் முட்டித் தள்ளிக்கொண்டு ஏறக்குறைய கூட்டத்தின் முன்புறத்திற்கு வந்து விட்டிருந்த அந்த சிறிய மெக்சிகோ பெண்ணிடம் அவர் அந்த பெண்ணை நோக்கிச் செல்லும் போது, ஒரு சிறிய குழந்தை மேலே எழுந்து வருவதைப் போல ஒரு தரிசனத்தை நான் கண்டேன். அந்த சிறிய தாய் என்னை நோக்கிப் பார்த்து "பாடர், பாடர்'' (padre) என்று கூச்சலிட்டாள்.

('பாடர்' என்ற ஸ்பானிஷ் மொழி, பாதிரி யார் அல்லது போதகர் என்று பொருள் என்று சகோ. பிரன்ஹாம் அநேக செய்தி களில் கூறுகிறார் - தமிழாக்கியோன்) அப்பொழுது நான், "அந்த சிறு குழந் தையை என்னிடம் கொண்டு வாருங்கள்'' என்று கூறினேன். நான் கொட்டும் மழை யில் நனைந்திருந்த, அந்த போர்வையால் சுற்றப்பட்டிருந்த அக்குழந்தை அசைவற் றிருந்ததைக் கவனித்தேன். அவள், ''அக் குழந்தை பலமணி நேரங்களுக்கு முன் பாகவே மரித்துவிட்டதென்றும், அதை மருத்துவரிடமோ அல்லது அடக்கம் செய்பவரிடமோ விட்டு விடாமல் ஜெபம் செய்யப்பட என்னிடமாக கொண்டு வந் திருக்கிறாள் என்று என்னிடம் கூறினாள். நான் அந்த சிறு குழந்தையின் மீது என் கரங்களை வைத்து தேவனிடம் ஒரு எளிய

ஜெபத்தை ஏறெடுத்தேன், தேவனே என்னுடைய சாட்சி. அந்த சிறு குழந்தை வீல் என்று சத்தமிட ஆரம்பித்தது. அது தன் கை கால்களை மிக வேகமாக அசைக்க ஆரம்பித்தது. அந்த காரியம் மெக்சிகோ தேசம் முழுவதையுமே அசைத்து விட்டது.

ஒரு தாயின் அன்பு ஏவி வெளி கொண்டுவரப்படுதல் - தேவனுடைய கிருபை பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஆமென்.

6. அடுத்த இரவில் மிகவும் வயது சென்றிருந்த சுருக்கம் நிறைந்த முகத்தைக் கொண்ட ஒரு மனிதனை என்னிடமாகக் கொண்டு வந்தார்கள். அந்த மனிதனுடைய துணிகள் மிகவுமாக கிழிந்த நிலையில் காணப்பட்டது. அந்த மனிதன் எனக்கு முன்பாக நின்று உருள் மணிகளைக்

கொண்ட ஒரு ஜெப மாலையை எடுத்து ஜெபிக்க ஆரம்பித்தார் - நான், "என் சகோதரனே அதை எறிந்து விடுங்கள், அது இப்பொழுது உங்களுக்குத் தேவைப் படாது'' என்று கூறினேன். ஓ, எவ்வளவாக அந்த வயதான மனிதனை நான் நேசித்து, அந்த மனிதனுக்காக வருத்தப்பட்டேன் - அப்பொழுது அந்த மனிதனுடைய மெலிந்த பாதத்தை நான் பார்த்தேன், அவை காலணிகள் இல்லாதிருந்தன, அவ ருடைய கால் சட்டைகள் மிகவும் கிழிந்த நிலையில் இருந்தன. இப்படிப்பட்ட பரிதாபத்திற்குரிய நிலையில் அந்த மனிதன் காணப்பட்டார், இயற்கையும் கூட அந்த மனிதனுக்கு எதிராக செயல்பட்டது என்பதை என்னால் நம்பவே முடிய வில்லை - அந்த மனிதன் முற்றிலும் பார்வை இழந்த குருடராக இருந்தார்!

இதை நான் கண்ட உடனே என் இருதயம் முழுவதுமாக கடலின் பேரலைப் போன்று அன்பும், இரக்கமும் பாய்ந்தோடியது, நான் மேலே தேவனை நோக்கி இயேசுவே இந்த வயது சென்ற குருடான தந்தையின் மீது தயவுகூர்ந்து இரக்கம் பாராட்டும். பிதாவே நீர் இவருக்கு உதவக்கூடுமா?'' என்று நான் கதறினேன், அப்பொழுது அந்த மனிதன், ''மகிமை, அடியாஸ் (Adios)'' என்று கூறினார். அவருடைய முழு பார்வையும் திரும்பவுமாக வந்தது. அது என்னவா யிருந்தது - அது தான் அவருடைய பாடுகளின் ஐக்கியத்துக்குள்ளாகச் செல்லு தல். நீங்களும் அதைச் செய்தாக வேண் டும்! நான் ஒருவருக்காக ஜெபித்து அது எனக்கு வெற்றியாக அமைந்திருக்குமென் றால், அது நான் அவர்களுடன் ஐக்கியத் திற்குள்ளாகி அவர்களுடைய பெலவீனங்

களை உணர்ந்து, அவர்களுடைய நிலையை உணரும் போது தான்; அப்பொழுது உங்களுக்குள் இருக்கின்ற ஒன்று உங்கள் சிந்தைக்கு அப்பால் இயங்கி வியாதியஸ்தருக்காக விசுவாச ஜெபத்தை ஏறெடுக்கின்றது: நீங்கள் அந்த மனிதனின் நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும், நீங்கள் அந்த மனிதனுக்காக பரிதபிக்க வேண்டும், நீங்கள் அந்த மனிதனுக்கு உதவுவதற்கு முன்னர் அந்த மனிதனுடன் நீங்கள் தரித்திருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் ஒரு விதமான ஆழத்திற்குள் செல்கிறீர்கள் .... அது தான் மானிட அன்பைக் காட்டிலும் அதற்கு மேலாக இருக்கின்ற தேவனுடைய அன்பு.

இன்னும் ஒன்றை நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன் - இதை கூறிய உடனே நீங்கள் என்னை ஒருக்கால் அதி

தீவிரமூட பக்தி வைராக்கியம் கொண்ட வன் என்று வகைப்படுத்திவிடலாம், எப்படியாயினும் நான் உங்களுக்குக் கூறத் தான் போகிறேன். என்னுடைய ஊழியம் அனைத்துமே அன்பினால் தான் சுற்றிப் போர்த்தப்பட்டிருக்கின்றது... எனக்கு முன் பாக எது இருந்தாலும் அதனிடம் நான் அன்பு செலுத்துகையில் அல்லது அதன் பேரில் அனுதாபம் கொள்கையில் ... ஏதோ ஒன்று சம்பவிக்கின்றது! சில வருடங் களுக்கு முன்பாக நான் பணியில் இருந்த போது, நான் காடுகளிலும் வயல்களிலும் என் பணியின் நிமித்தமாக நான் சென்று கொண்டிருந்த நேரத்தில், நான் ரோந்து சென்று கொண்டிருந்த அந்த இடத்திற்கு சற்று தொலைவில், வியாதியாயிருந்து நான் வர வேண்டும் என்று எதிர்ப்பார்த் திருந்த ஒரு நண்பரின் இடம் நான்

இருப்பது என் நினைவிற்கு வந்தது. நான் அருகாமையில் இருப்பதால் இப்பொழுது அந்த நண்பரிடம் செல்லாம் என்று நான் எண்ணினேன், ஆகவே, மிகக் குறைந்த தூரம் இருந்த குறுக்கு வழி என அறிந் தவனாக, சுற்றிலும் வேலியிடப்பட்டிருந்த ஒரு வயலிற்கு குறுக்கே நான் நடக்கத் துவங்கினேன். நான் என்னுடைய துப் பாக்கியை ட்ரக் வாகனத்தின் இருக்கைக்கு கீழே வைத்தேன். நான் வேலியைத் தாண்டி குதித்து வயலில் குறுக்காக என் நண்பரின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

7. நான் வேலியை விட்டு 200 கெஜம் நடந்து சென்ற போது ஒரு பெரிய கறுப்பு நிறக்காளை என் முன்பாக எழும்பி நிற்பதைக் கண்டேன். ஓ அது எங்கே யிருந்து வந்தது? அது பர்க் பண்ணையி லிருந்து கொண்டுவரப்பட்டிருந்த, ஆட்

களைக் கொல்கின்ற காளை இதுவே என்று அப்பொழுது நான் நினைவுக்கூர்ந்தேன், சில மாதங்களுக்கு முன்பு அது ஒரு மனிதனைக் கொன்றுவிட்டது. ஆனால் அந்த காளை மிக அருமையான இனப் பெருக்கம் செய்கின்ற ரகத்தை சேர்ந்ததாக இருந்தபடியால் அவர்கள் அதை இந்த பண்ணைக்கு விற்றனர் - அந்த காளை இங்கே இருப்பதை நான் மறந்து போனேன். அது எனக்கு முன்பாக 30 கெஜ தூரத்தில் நின்று கொண்டிருந்தது - நான் என் துப்பாக்கியை எடுக்கலாம் என்று கையை நீட்டினேன். ஆனால் அது இல் லாதிருந்தது, நான் அதை டிரக் வண்டியில் வைத்ததால் அது அங்கிருந்தது. ஓ அந்த துப்பாக்கியை அங்கே வைத்ததற்காக நான் மகிழ்ச்சி கொள்கிறேன், இல்லையென்றால் நான் அந்த காளையை கொன்று போட்டு

அதற்கான பணத்தையும் நான் விலையாகச் செலுத்தி இருப்பேன். அந்த காளை முரட்டுத்தனமாக மண்ணை உதைத்து என்னை நோக்கி வர ஆரம்பித்தது. வேலி மிகத் தொலைவில் இருப்பது எனக்குத் தெரியும், எனக்கு அருகாமையில் இருந்த ஒன்றே ஒன்று ஒரு சிறு ஓக் செடிக் கொத்து மாத்திரமே, அது எனக்கு பின்புறமாகக் காணப்பட்டது. ஓ நான் என்ன செய்வது? நான் எந்த திசையில் ஓடினாலும் அக் காளை என்னை நெருங்கி விடும் - மரணம் தான்! அப்பொழுது நான் என் கர்த்தரை நினைத்து "இயேசு கிறிஸ்துவை நம்பினவ னாக, தைரியத்துடன் நான் நடப்பது போல நான் என் மரணத்தை நோக்கி நடப்பேன்'' - என் இருதயத்தில் இவ்வாறு கூறினேன். அந்த விதமாக என் இருதயத்திலிருந்து வந்தவுடனே (இதை சிறு பிள்ளைத்தனமாக

தயவு செய்து எடுத்துக் கொள்ளாதீர்கள்) அப்பொழுது ஏதோ ஒன்று சம்பவித்தது. ஓ அது சரியாக அது இப்பொழுதும் சம்ப விக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்! எப்பொழுதுமே இந்த காரியங்களில் அந்த ஏதோ ஒன்று சம்பவிக்கின்றது. அந்த காளையை வெறுப்பதற்கு பதிலாக நான் காளையின் பேரில் இரக்கங்கொள்ள ஆரம்பித்தேன், நான் அதை நேசித்தேன், இங்கு என் சகோதரருடன் நான் நின்று கொண்டிருப்பதைப் போல அந்த மிரு கத்தைக் குறித்து பயங்கொள்ளாமல் நின் றேன். எல்லாப் பயமும் நீங்கிப் போயிற்று, அப்பொழுது நான், "பரிதாபத்திற்குரிய உயிரினமே, நான் உன்னுடைய பிரதே சத்தில் நின்று கொண்டிருக்கின்றேன்... நீ ஒரு மிருகமாக இருக்கின்றாய், உனக்கு எந்த ஒரு வித்தியாசமும் தெரியாது ....

உன்னுடைய உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள மாத்திரமே உனக்குத் தெரியும்'' என்று நினைத்தேன். நான், ''ஓ தேவ னுடைய உயிரினமே, நான் தேவனுடைய ஊழியக்காரன், வியாதிப்பட்டுள்ள என் சகோதரனுக்காக ஜெபிக்க நான் சென்று கொண்டிருக்கின்றேன், உன்னை தொந் தரவு செய்ததற்காக நான் வருத்தப்படு கிறேன், ஆனால் இயேசுவின் நாமத்திலே, நீ போய் படுத்துக்கொள்'', என்று அந்த காளையிடம் இந்த வார்த்தைகளை சத்தமிட்டும் கூறினேன். அப்பொழுது அது தன்னுடைய குளம்புகளை புழுதிக்குள் உதைத்து அப்படியே நின்றது. இப்பொ ழுது காவ்விதம் உள்ளேனோ அதே போன்று நான் அங்கே சலனமில்லாமல் நின்று கொண்டிருந்தேன். ஆட்களைக் கொல்லுகின்ற - அந்த மிகப்பெரிய காளை

என்னை கொல்வதற்காக என்னை நோக்கிப் பாய்ந்து வந்த அந்த பாய்ச்சலை, எனக்கு முன்பாக 5 அடி தூரத்திலே நிறுத்தியது. அது மிகவுமாக திகைப்புற்ற நிலையில் இங்குமங்குமாக பார்த்தது, பிறகு திரும்பிச் சென்று படுத்துக்கொண்டது, அப்பொழுது நான் எனக்கும் அதற்கும் 5 அடி இடைவெளிக் குள்ளான தூரத்தில் அதைக் கடந்து சென்றேன், அதற்குப் பிறகு அந்தக் காளை அசையவே இல்லை, ஓ, அன்பை சோதித்துப் பார்க்கும்படி அதை நீ ஈடுபடுத்துகையில் அது பூமியில் இருக்கின்ற ஒவ்வொரு விரோதியையும் மற்றும் படுவேதனையையும் தோற் கடித்துவிடும். என் சகோதரனே, கெபியிலே சிங்கங்களின் வாய்களை மூடின அந்த தேவன் இன்றும் ஜீவிக்கின்றார்!

8. இன்றிரவு இங்கு எங்கோ அமர்ந்துள்ள என் மனைவி, நான் என் சட்டையைக் கழற்றி விட்டு புல் செதுக்குவதை எப்பொழுதுமே சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பாள். நான் இருக்கின்ற இடத்தில் சுமார் அரை ஏக்கர் பரப்பளவிற்கு புல் வளர்ந்திருக்கும், என் வீட்டிற்கு முன்பும் பின்புறமும் அதிக புல் வளர்ந்திருக்கும். நான் புல் செதுக்குகையில் சூரிய வெப்பத்தில் எனக்கு அதிக உஷ்ணமாக இருக்கும். ஆகவே வீட்டிற்கு பின்புறமாக உள்ள தோட்டத்தில் புல் வெட்டுகையில் நான் என் சட்டையைக் கழற்றி விடுவேன், என்னால் முடிந்த வரையில் பெருமளவில் புல்லை வெட்டிவிடுவேன். வியாதியஸ்தருக்காக ஜெபிக்க அழைப்பு வரும், அப்பொழுது நான் வீட்டுக்குள் ஓடி, ஜீன்ஸ் மற்றும் வியர்வையால் நனைந்திருக்கும்

துணிகளை கழற்றி போட்டு சில நிமி டங்களில் பார்ப்பதற்குகந்த விதத்தில் ஆடை மாற்றி வருவேன். ஆம், ஒரு நாளிலே புல் வெட்டுவதற்கு மிகச்சிறு நேரம் மாத்திரமே எனக்கு கிடைக்கும். நான் பின்புறத்தில் இருக்கும் புற்களை செதுக்கி முடிக்கும் முன்னரே முன்புறத்தில் உள்ள புற்கள் வளரும். ஆகவே இவ்வித மாக நான் செய்து கொண்டிருப்பேன்.

ஒரு உஷ்ணமான மதிய வேளையில் என்னை யாரும் பார்க்காத விதமாக இருந்தது. ஆகவே என்னுடைய சட் டையை நான் கழற்றி விட்டேன், மிக கடுமையாக வேகமாக புல்லை வெட்டி னேன். அங்கே வேலியின் மூலையில் ஒரு குளவி இனத்தைச் சேர்ந்த பெரிய பூச்சி வகைகளில் ஒன்றான அந்த பெரிய பூச்சி களின் கூடு இருப்பதை நான் மறந்து

விட்டேன். நான் அந்த புல்வெட்டும் கருவியை அந்த கூட்டுக்குள் மோதி விட்டேன். நண்பர்களே, தேவனே என்னுடைய நியாயாதிபதி, ஒரு கண நேரத்தில் அந்த பூச்சிகள் என் உடல் முழுவதுமாக மூடிக்கொண்டன. அந்த குளவி வகைப் பூச்சின் கொடுக்கு எவ்வளவு அபாய கரமானது என்பதை நீங்கள் அறிவீர்கள், அது உங்களைக் கொன்று போடும் - நான் அங்கே சட்டை அணியாமல் நின்றுக் கொண்டிருந்தேன் - அப்பொழுது ஒன்று சம்பவித்தது! அன்பு, அது தான் அது. நான் அந்த பூச்சிகளை வெறுப்பதற்கு பதிலாக, "பரிதாபத்திற்குரிய தேவனுடைய உயிரினங்களே, உங்களுக்கு எதிராக என்னிடம் ஒன்றுமே இல்லை. அது உங்களுடைய வீடாகும். நான் தான் உங்களை தொந்தரவு செய்து விட்டேன்'' என்று நினைத்தேன்.

அப்பொழுது நான் அந்த பூச்சிகளிடம் "உங்கள் வீடு அங்கிருப்பதை நான் மறந்து போனதற்காக வருத்தப்படுகிறேன், நான் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உங்களை தொந்தரவு செய்து விட்டேன் - தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்'' என்று உறக்கச் சத்தமிட்டுக் கூறினேன். இது சிறுபிள்ளைத்தனமாக காணப்படலாம், ஆனால் நாம் எப்பொழுது மே பெரிய ஆட்களாக நடித்துக் கொண்டு மிக அதிகமாக காரியங்களை நம்முடைய சொந்த கரங்களில் எடுத்துக் கொள் வதைக் காட்டிலும் நாம் தேவனுடைய பிள்ளை களாகவே இருப்பது தான் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். அந்த குளவி பூச்சி கள் என் உடல் முழுவதுமாக இருந்தன. ஆனாலும் அவைகளைக் குறித்து நான் பயப்படவில்லை, நான் சிறு உயிரினங்

களே, உங்கள் கூட்டிற்குத் திரும்பிச் செல் லுங்கள், நான் உங்களுக்கு தீங்கிழைக்க மாட்டேன்'' என்று கூறினேன். தேவன் ஜீவிக்கிறார், அந்த பூச்சிகள் என்னை மூன்று அல்லது நான்கு முறை வேகமாக சுற்றியது, பிறகு நேராக அவைகள் தங்கள் கூட்டிற்குச் சென்று விட்டன. அது அன் பாகும் - ஓ என் நண்பர்களே அதுதான் அன்பின் வல்லமை.

9. இயற்கையுடன் நான் அன்பைக் கொண்டு தொடர்பு கொள்ள இன்னொரு முறை இவ்விதமாக நிகழ்ந்தது: கடந்த கோடைக் காலத்தில் நான் என் அருமை நண்பர்கள் லீயோ மற்றும் ஜீனுடன் வீட்டிற்கு முன்புறத்தில் உட்கார்ந்து தேவ னுடைய வார்த்தையை அவர்களுக்கு போதித்துக் கொண்டிருந்தேன். ஒரு தாயின் அன்பு என்ற பொருளின் பேரில் ஒரு

ஆழமான பாடத்தில் நாங்கள் இருந்தோம். அக்காலை செய்தித்தாளில் ஒரு அழகான இளம் கறுப்பினப் பெண் முறைத்தவறி கருவுற்றிருந்த ஒரு குழந்தையை பெற்றெடுத்து ஒரு போர்வையில் சுற்றி அதை ஓஹியோ நதியின் பாலத்திற்கு கொண்டு சென்று அதை தண்ணீரில் போட்டு விட்ட சம்பவம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு டாக்சிகார் ஓட்டுனர் சட்ட ஒழுங்கு அதிகாரிகளிடம் தெரிவித்தார், அவர்கள் அதை விசாரித்து அது உண்மை என்பதை கண்டு பிடித்தனர். அந்த பெண்ணிற்கு நிச்சயமாக அன்பு என்பது இல்லை - அந்த குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண் ணாக மட்டும் அவள் இருந்தாள், ஆனால் அவள் தாய் அல்ல என்று அந்த காரியத்தைக் குறித்து நாங்கள் கருத்து பரிமாறிக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது வண்டிப்பாதையில் ஒரு ஓப்பசம் (ஒரு சிறு அமெரிக்க மிருகம் - தமிழாக்கியோன்) என்னும் சிறு மிருகம் வந்து கொண்டிருந்ததை நாங்கள் நேரடி யாகக் கண்டோம். அது வேலிகள் இல்லாத மற்ற வீட்டு முற்றங்களைக் கடந்து வேலியிடப் பட்டிருந்த என் வீட்டு முற்றத்திற்கு, அது தன்னுடைய வழியை அறிந்து வைத்துள்ளது போல, நேராக வந்தது. அது வேலியின் கீழாக தவழ்ந்து தாண்ட முயலவில்லை, அது நேராக வண்டிப் பாதையிலே வந்து திரும்பி, நேராக என் வீட்டு முன்புறத்துக்கு வந்தது. நான் பையன்களிடம், "அதற்கு ராபீஸ் நோய் அல்லது வேறெதோ ஒன்று இருக்கவேண்டும், ஏனெனில் ஓப்பசம்கள் இரவில் தான் நடமாடும் - அவைகளால்

பகலில் சரியாக பார்க்கமுடியாது." என்றேன்.

அதைப் பார்க்கும்படியாக நாங்கள் அந்த வண்டிப்பாதைக்கு அருகில் சென் றோம். முந்தைய நாளில் சகோதரன் பாங்க்ஸ் உட் விட்டு விட்டிருந்த அந்த தோட்டத்தை சமப்படுத்தும் கட்டையை நான் எடுத்து பாதுகாப்பிற்காக அதன் மேல் கவனமாக வைத்தேன். அந்த மிருகம் வழக்கமாக செய்கின்ற காரியமான, இறந் தது போல பாசாங்கு செய்யாமல், அது அந்த கட்டையை கடிக்க ஆரம்பித்தது. இது என்னை வியப்புக்குள்ளாக்கினது, ஏனெ னில் அந்த ஒப்பசம் மிருகங்கள் ஒரு சிறு அபாய அடையாளத்தைக் கண்ட உடனே இறந்து விட்டது போலப் பாசாங்கு செய்து படுத்து கிடக்கும் - அது அதின் மூல வழக்கமாகும்.

10. நான் அதன் முதுகுப் புறமாகத் திருப்பிப் பார்த்தேன், அது மிக மோசமாக படுகாயமடைந்திருந்தது - அதின் கால் ஒன்று உடைந்திருந்தது, அதின் தலையில் ஒரு பக்கம் நசுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட பகுதி உறைந்து போன ரத்தத்தால் நிறைந் திருந்தது. அந்த காயத்தில் ஈக்கள் அமர்ந்து அதைப் பெரிதாக்கி, அதில் புழுக்கள் உருவாக ஏதுவானது. அது மிக மோசமாக கிருமிகளால் நிறைந்ததால், அழுகின மாமிச நாற்றம் போல நாற்றமெடுத்தது. அது சில நிமிடங்கள் குப்புறப்படுத் திருக்கையில் அது சுமந்து வந்திருந்த சிறு குட்டிகள், அதினுடைய குட்டிகளை வைக் கும் மதலைப்பையிலிருந்து வெளியே வந்து விட்டன. அந்த ஓப்பசம் மிக பெலவீனமாக இருந்ததால் அதனுடைய மதலைப்பையை (pouch) நீண்ட நேரம்

மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. அங்கே ஒன்பது சிறு குட்டிகள் இருந்தன. அது தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைப் பாதுகாக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. ஓ அதை நினைத்துப் பாருங்கள், சரியா! அது தன் மரித்துக் கொண்டிருக்கிற நிலையிலும் பலம் குறைகின்ற நிலையிலும் தன்னுடைய சிறு குட்டிகளுக்கு பாலூட்டி அவைகளைக் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தது. நான் லீயோ மற்றும் ஜீனிடம், "இங்கே பாருங்கள் இளைஞர்களே, இது தான் உண்மையான தாய் - இது தன் குழந்தைகளை காப்பாற்ற தன்னுடைய கடைசி மூச்சு வரை பிரயாசப்படுகிறது, ஆனால் அந்த கறுப்பு இன பெண்ணோ தன்னுடைய குழந்தையை ஆற்றில் போட்டு விட்டாள். ஒரு தாய் தன்

குழந்தைக்கு பாராட்டுகிற உண்மையான தூய்மையான அன்பு இங்குள்ளது," என்றேன்.

ஓ, என் இருதயம் மிகவுமாக தொடப் பட்டது! அது மறுபடியுமாக எழுந்து நிற்க முயற்சித்தது, நான் அதை விட்டு விட்டேன், அது எழுந்து என் வீட்டை நோக்கியிருந்த பாதையில் செல்ல ஆரம் பித்தபோது நாங்கள் அங்கு நின்று அதை கவனித்துக் கொண்டிருந்தோம். அந்த ஒப்பசம் மிருகம் நேராக என்னுடைய வீட்டு முன் படிக்கட்டுப் படிகளில் சென்று சரிந்து விழுந்தது, அடுத்த அடியை அது எடுத்து வைக்கவே இல்லை. நாங்கள் அதனிடம் நடந்து சென்றோம், அப் பொழுது சகோதரன் மற்றும் சகோதரி உட்ஸ் வந்தார்கள். சகோதரி உட்ஸ் ஒரு கால்நடை மருத்துவம் தெரிந்தவர்களான

படியால் அவர்கள் என்னிடம், அது பிழைக்க முடியாத அளவிற்கு மிக மோசமாக படுகாயமடைந்திருக்கிறது, ஆகவே சகோதரன் பிரன்ஹாமே நீங்கள் அதை கொன்று போடத்தான் வேண்டும்'' என்று கூறினார்கள். நானோ, "ஓ, என்னால் முடியாது!'' என்றேன். அதற்கு அவர்கள், "இது மரிக்கத்தான் போகின்றது, அதன் குட்டிகள் பட்டினியால் சாகப் போகிறது, ஆகவே அந்த குட்டிகளை எடுத்து அவை களை சீக்கிரமாக கொன்று விடுங்கள்'' என்றார்கள். அவைகள் வேதனைப்பட விடுவதைப் பார்க்கிலும், அவைகளைக் கொன்று விடுவது நலம் என்று என்னிடம் அவர்கள் உறுதியுடன் கூறினார்கள் - ஆனால் ஓ, அவ்விதமாக என்னால் செய்ய முடியாது. ஆகவே அவர்கள் ''சகோதரன் பிரன்ஹாமே, நீர் சென்று துப்பாக்கியைக்

கொண்டு வந்து அந்த பரிதாபமான மிருகத்தை சுட்டுக் கொன்று விடுங்கள்'' என்று கூறினார்கள். ''இல்லை, சகோதரி உட்ஸ், அவ்விதம் செய்ய வேண்டும் என்று நான் நம்பவில்லை. என்னால் அதைச் செய்ய முடியாது,'' என்றேன். அதற்கு அவர்கள், ''நீங்கள் ஒரு வேட் டைக்காரர் தானே?'' என்றார், அதற்கு நான், "ஆமாம், ஆனால் நான் கொலை செய்பவன் அல்ல'' என்றேன். அதற்கு அவர்கள், "நல்லது, என் கணவர் அவ் விதம் செய்யும்படி கூறுங்கள்'' என்றார்கள். அந்த ஏற்பாடும் எனக்கு சரியானதாக தென்படவில்லை. ஆகவே நான், ''சரி, நாம் சற்று காத்திருப்போம்'' என்றேன்.

நாளானது கடந்து கொண்டிருந்தது, அன்று மாலை நான் என் குடும்பத்துடன் வெளியே சென்றேன். நாங்கள் திரும்பி

வந்த போது ஓ அந்த ஒப்பசம் இன்னுமாக இருக்கின்றதா என்று காண நான் சென்றேன். அது அங்கே இருந்தது, முன்பிருந்ததை விட மரணத்தை அது நெருங்கி இருந்தது. அதற்கு சிறிது பலம் இருந்திருக்குமானால் இருட்ட ஆரம்பித்த உடனே அது புறப்பட்டுச் சென்றிருக்கும். ஏனெனில் அவை இரவில் நடமாடும் விலங்குகளாகும் என்பது எனக்குத் தெரியும் - ஆனால் அது அங்கே இன்னுமாக இருந்தது, அதின் குட்டிகள் பால் குடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. ஓ, காயம் பட்டு மரித்துக் கொண்டு படுத்திருந்த அந்த பரிதாபமான விலங்கிற்காக நான் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அடுத்த நாள் காலை என் மகள் ரெபெக்காள் என்னிடமாக வந்தாள் -

அப்பொழுது சுமார் காலை ஆறு மணி இருக்கும், நான் கர்த்தர் பேரில் தியானிக்கத்தக்கதாக என்னுடைய அறைக்கு அப்பொழுது தான் சென்றிருந்தேன். அவள், அப்பா, அந்த பாவமான தாய் ஒப்பசம் விலங்கை என் மனதிலிருந்து என்னால் எடுத்துப் போட முடியவில்லை'' என்றாள். நான், ''என்னாலும் அவ்விதமாகச் செய்யமுடியவில்லை பெக்கி'' என்றேன். ஆகவே நாங்கள் அதைச் சென்று பார்க்க முடிவு செய்தோம், நாங்கள் அந்த அதிகாலை வேளையில் அங்கே நின்று அந்த மிருகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம், அதன் நிலைமை இன்னும் மோசமாகியிருந்தது - அதனுடைய சுவாசம் மிக குறைவாக இருந்ததால் அது சுவாசிக்கிறதா என்பதை கண்டுபிடிப்பதே அரிதாயிருந்தது. பெக்கி

அழ ஆரம்பித்தாள். ஆகவே நாங்கள் உள்ளே சென்றோம். நான் அவளை திரும்பவுமாக படுக்கைக்கு அனுப்பினேன். நான் திரும்பி என் ஜெப அறைக்கு வந்து உட்கார்ந்து, ''ஓ தேவனே, அந்த பரிதாப மானதாய் ஒப்பசம் எவ்வளவாக வேத னைப்பட்டுக் கொண்டிருக்கும் - அது எப்படியாக தன் குழந்தைகளை நேசிக் கிறது. அது கொல்லப்படுவதை நான் காணவேண்டிய அவசியம் இருக்காது என நான் நம்புகிறேன்,'' என்று நான் நினைத் தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண் டிருக்கையில் ஏதோ ஒன்று என்னிடம், நேற்று அந்த மிருகத்தைக் குறித்து பிரசங் கித்துக் கொண்டிருந்தாயே, நீ உன் பொரு ளுக்கு அதை உவமானமாகப் பயன் படுத்திக் கொண்டாயே'' என்று கூறினது. நான், "அது சரிதான்'' என்றேன். "அது

தான் உண்மையான தாய் என்று நீ கூறினாயே" நான் ''அது சரிதான்'' என்றேன். ஆனால் நான் அதை உன் கதவண்டை அனுப்பியிருக்கிறேன், அது உன் கதவண்டை ஒரு சீமாட்டியைப் போல இருபத்து நான்கு மணி நேரமாக தரித்திருந்து ஜெபிக்கப்படத்தக்கதாக தன்னுடைய தருணத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறதே, நீ இன்னும் ஒரு வார்த்தை கூட கூறவில்லையே.'' நான், "நல்லது, நான்..." என்றேன், நான் ''யாரிடம் நான் பேசிக் கொண்டிருக் கிறேன். எனக்கு நானே நான் பேசிக்கொண்டிருக்கிறேனா?'' என்று கூறினேன். நான் குதித்தெழுந்து, "ஓ, தேவனே, பேசுவது நீர் தானே?" என்றேன். நான் என் தலையைத் தாழ்த்தி "ஓ இரக்கமுள்ள தேவனே, அதை அறியாதிருக்கிற உம்முடைய தாழ்மையுள்ள

ஊழியக்காரனை மன்னியும். அன்புள்ள தேவனே நான் ஞானத்தில் குறைவுள்ளவனாகவும் புரிந்து கொள்வதில் மிகவும் மந்தமுள்ள வனாகவும் இருப்பதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அன்புள்ள தேவனே என்னை மன்னிக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்'' என்று அழுதேன். பிறகு நான் அந்த பரிதாபமான தாய் ஓப்பசத்திடம் ஓடி அந்த மிருகத்திற்கு அருகே முழுங்காலிட்டு, அது திரும்பவும் குணமடைய, ஜெபிக்க, தேவனிடம் என் தலையை உயர்த்தினேன், ஏறக்குறைய ஜீவனே இல்லாத அந்த ஓப்பசத்தின் உடலின் மீது என் கையை வைத்து பயபக்தியுடன் ஜெபித்தேன். நான் மறுபடியுமாக காலூன்றி நிற்கையில் அதனுடைய சரீரத்தில் ஜீவன் புதிதாக வர ஆரம்பித்தது - அது குதித்தெழுந்து தன் குட்டிகளை

ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு, "அன்புள்ள ஐயா, உமக்கு நன்றி'' என்று கூறப் போவது போல என்னை நோக்கிப் பார்த்து விட்டு புல்வெளியைக் கடந்து வண்டிப் பாதையை அடைய புறப்பட்டது. அது வண்டிப் பாதைக்கு சென்று, பிறகு திரும்பி, அது வந்த விதமாகவே சாலைக்குச் சென்று காட்டுக்குள் சென்றது! நான் மிகவுமாக களிகூர்ந்தேன். ஓ எப்படியாக நான் தேவனைத் துதித்தேன்! அந்த பரிதாபத்திற்குரிய ஒப்பசம் மிருகத்தை ஜெபத்திற்காக அவர் என் கதவண்டை வழி நடத்தினார், அதை ஜீவனுக்கென்று எழுப்பினார், பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணத்தக்கதாக ஆத்துமா என்பதே இல்லாதிருக்கிற ஒரு மிருகம் - ஆனாலும் தேவன் தம்முடைய பலத்த கரத்தினால் அதை வழிநடத்தினார். எனக்குத் தெரிந்த வரையில் அது

இன்றைக்கும் ஜீவித்து தன்னுடைய சிறு குடும்பத்தை எழுப்பிக்கொண்டிருக் கிறது.

12. தேவன், தம்முடைய பரிசுத்த ஆவியினாலே ஒரு சாதாரண ஊமையான ஓப்பசம் மிருகத்தின் ஜீவனானது காக்கப் படத்தக்கதாக, ஜெபத்திற்கு என்னிடமாக வழிநடத்துகிறாரென்றால், ஒரு ஓப்பசம் மிருகத்தைக் காட்டிலும் நீங்கள் எவ்வள வாக மதிப்புடையவர்களாயிருப்பீர்கள்? என் அருமை சகோதரரே, நீங்களும் ஜெபத் திற்காக இன்றிரவு இங்கே வந்திருக் கிறீர்களா? ஒரு ஓப்பசம் மிருகத்தை தேவன் எழுப்புகிறாரென்றால், நிச்சயமாக உங்களையும் அவராலே எழுப்பமுடியும். ஓ, நாம் நம்முடைய முழு இருதயத் தோடும் அவரை நோக்கிப் பார்ப்போமாக! வியாதிப்பட்டு இங்கே படுத்திருக்கிற வர்களே, இராஜாதி இராஜா உங்களை

நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? கவலைப்படாதீர்கள், பயப்படாதீர்கள். "ஓ, நான் தேவனுக்கு முக்கியமில்லாதவன்'' என்று நீங்கள் கூறலாம், ஆனால் நான் இதைக் கூறுகிறேன் - நீங்கள் அவருடைய பிள்ளை, நீங்கள் தேவனுக்கு தேவையாயிருக்கிறீர்கள், அவர் உங்களை நேசிக்கிறார். அவர் இவ்வளவாக உங்களில் அன்பு கூர்ந்ததினால் தான் அவருடைய அன்பானது வெளிக்காண்பிக்கப்பட்ட போது, எல்லையற்ற ஒப்புயர்வற்ற கிருபையானது அதனுடைய இடத்தை எடுத்துக் கொண்டு, உங்களை தம்மிடமாக திரும்ப மீட்பதற்காக ஒரு இரட்சகரை அனுப்பியது; இந்த இரட்சகரில் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். ஏனெனில் அவர் உங்களை நேசித்தார்.

தேவன் தம்முடைய மக்களின் உபத்திரவங்களை அவர் கண்டார். ஆகையால் அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமாகிவிட்டீர்கள் - தேவனுடைய கிருபையானது ஒரு வழியை உண்டாக்குகிறது, ஏனெனில் அவருடைய அன்பிற்கு அது தேவைப்படுகிறது. ஆகவே அவருடைய அன்பானது அவருடைய உணர்வுகளை வெளிக்காண்பித்தபோது கிறிஸ்து தம்முடைய இடத்தை எடுத்துக்கொள்ள புறப்பட்டு வந்தார் - அந்த இடத்தை எடுத்துக்கொள்ள ஒரு காரியமானது தேவைப்பட்டது - அவருடைய அன்பானது உனக்காக தனியாக வந்தது, கிருபை உனக்காக ஒரு பலியை அளித்தது. இப்பொழுது நீங்கள் அதை விசுவாசிக்க மாத்திரமே கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள், ''அவரை விசுவாசிக்கிறவன் எவனோ

அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான் நீங்கள் அந்த காட்சியை பிடித்துக் கொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

13. தேவனுடைய சமய நடைமுறை ஒழுங்குகளில் இருக்கின்ற கருவிகளில் மகத்தானவைகளில் ஒன்று அன்பாகும். தேவன் அன்பாகவே இருக்கிறார், அவர் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது, ஆகவே நீங்கள் அவருடைய பிள்ளைகளில் ஒன்றக நீங்கள் ஆகுகையில் நீங்கள் அந்த அன்பின் ஒரு பாகமாக, தேவனுடைய நடைமுறை ஒழுங்குகளின் ஒரு பாகமாக ஆகிவிடுகிறீர்கள், அவருடைய ஆட்சிப்பரப்பில் ஒரு குடிமகனாக ஆகிவிடுகிறீர்கள். நீங்கள் அவ்விதமாக செய்யும் போது நீங்கள் தேவனுடைய குமாரன் அல்லது குமாரத்தியாகி விடுகி

றீர்கள், அவர் உங்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

இப்பொழுது நித்திய ஜீவன் என்பதைக் குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்படும் கிரேக்கச் சொல் 'சோ'' (Zoe) என்பதே, அதற்கு தேவனுடைய ஜீவன் என்று அர்த்தம்; அப்படியானால் உங்களுக்கு வெளிக் காண்பிக்கப்பட்டுள்ள தேவனுடைய அன்பு, உங்களுடைய மனமாற்றத்திற்குப் பிறகு உங்களை அவருடைய ஒரு பாகமாகச் செய்து விடுகிறது - அப்பொழுது நீங்கள் ஒரு பிள்ளையாகிறீர்கள், அது பிறந்த ஒன்று', அல்லது ஒன்றிலிருந்து வந்தது'' என்பதாகும், இப்பொழுது அது உங்களை தேவனுடைய குமாரன் அல்லது குமாரத்தி என்ற உறவுமுறையில் வைக்கின்றது.

சிருஷ்டிகராகிய தேவன் எல்லா காரியங்களையும் தம்முடைய உரைக்கப்பட்ட வார்த்தையின் மூலமாக தம்முடைய வல்லமையால் சிருஷ்டித்தார், எல்லா காரியமும் தேவனுடைய வார்த்தை வெளிப்படுவதேயாகும். முழு உலகமும் அவரால் உண்டாக்கப்பட்டது, அப்படியானால் நாம் தேவனுடைய வார்த்தையை அலட்சியம் செய்ய முயலும் போது அல்லது நம்முடைய சொந்த கற்பனையினால் தேவனுடைய வல்லமையை நாம் வரம்புக்குட்படுத்த முயல்கையில் எவ்வளவாக நாம் தவறு செய்கிறோம். நாம் இன்றிரவு நின்று கொண்டிருக்கின்ற இந்த பூமியானது வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை மாத்திரமே - தேவன் தம்முடைய உரைக்கப்பட்ட வார்த்தையி

னாலே உலகத்தை உண்டாக்கினார். ஓ, என்னே!

ஜெபிக்கப்பட நீங்கள் இன்றிரவு இங்கு ஏன் வந்திருக்கிறீர்கள்? உங்களுடைய ஆத்துமா தேவனோடு எந்நிலையில் இருக் கின்றது என்பதுதான் என்னுடைய கேள்வி யாகும்? நாம் இப்பொழுது நம்முடைய தலைகளைத் தாழ்த்தி அவரிடம் பேசு வோமாக..... நண்பர்களே நினைவுகூருங் கள், நான் பிரசங்கிப்பதிலேயே கடைசி செய்தியாக இது இருக்குமானால், என் னுடைய வார்த்தை உண்மையாகும், ஏனெ னில் அதுதான் சத்தியம் என்று வேதாகமம் கூறுகின்றது, என்னுடைய ஊழியத்தில் கிரியை செய்து கொண்டிருக்கின்ற பரிசுத்த ஆவியானவர் அது சாத்தியம் தான் என்பதை நிருபித்துக் கொண்டிருக்கிறார். விஞ்ஞான உலகமானது அது சாத்தியம்

தான் என்பதை அறிந்திருக்கின்றது ஏனெனில் அது உண்மையாகவே புகைப்படமாக எடுக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் விசுவாசித்து தேவன் உங்கள் மத்தியில் கிரியை செய்வதைப் பாருங்கள். நான் உங்களுக்காக ஜெபிக்கையில், இப்பொழுது இங்கே பிரசன்னமாயிருக்கின்ற ஒளிதான், டெக்சாசில் உள்ள ஹூஸ்டனில் புகைப் படமாக எடுக்கப்பட்ட அதே ஒளி என்று நான் விசுவாசிக்கிறேன். மோசேயைத் தலைவனாக வைத்து இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினது இதே அக்கினி ஸ்தம்பமே என்று என்னுடைய இரட்சகரும் சிருஷ்டிகருமாகிய தேவனுக்கு முன்பாக நான் மேலும் விசுவாசிக்கிறேன். இப்பொழுது இன்றிரவு இங்கே இருக்கின்ற மனிதருடைய இருதயங்களின் இரகசியங்களை வெளிப்படுத்த இங்குள்ள அந்த

அக்கினிஸ்தம்பம் தான், மாம்சமாக்கப் பட்டு நம் மத்தியில் இயேசு கிறிஸ்து வாகிய தேவனுடைய குமாரனாக வாசம் பண்ணத்தக்கதாக கீழே இறங்கி வந்தது அதே அக்கினி ஸ்தம்பம் தான் என்று நான் விசுவாசிக்கிறேன். இயேசு, "நான் தேவ னிடத்திலிருந்து வந்தேன், தேவனிடத்திற்கு திரும்ப போகிறேன்'' என்று கூறினார், அவர் தேவனிடத்திற்கு திரும்பிச் சென்ற பிறகு அவர் திரும்பவுமாக இந்த ஒளியின் வடிவில் திரும்ப வந்துள்ளார் என்று நான் விசுவாசிக்கிறேன், மோசே மற்றும் வேதாகமம் முழுவதிலுமிருக்கின்ற மற்ற தீர்க்கதரிசிகளிடமும் அவர் அதே ஒளியின் வடிவத்தில் தோன்றினார். பவுல் தமஸ்கு வுக்குச் செல்லும் வழியில், அவரோடிருந்த மற்றவர் எதையுமே காணவில்லையெனி னும், பவுல் கண்டது இதே ஒளிதான்

என்றே நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுது எனக்குப் பக்கத்தில் இருக்கும் இதே ஒளி தான் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து வெளியே வழி நடத்தினது என்று நான் விசுவாசிக்கிறேன்.

14. இப்பொழுது அவர் இங்கேயிருக்கின்றார். இங்கே கறுப்பு நிறத் தலைமயிரையுடைய, நரம்பு தளர்ச்சியால் அவதியுற்று அமர்ந்துள்ள இந்த சிறிய பெண்ணின் ஜெபத்திற்கு அவர் பதிலளித்துக் கொண்டிருக்கிறார். அவளுக்கு அடுத்ததாக அமர்ந்திருக்கும் அந்த மனிதன் முதுகு வலியால் கஷ்டப்படுகின்றார் - நீங்கள் இருவரும் கணவன் மனைவி - அது உண்மையென்றால் உங்கள் கரங்களை உயர்த்துங்கள். உங்களை எனக்குத் தெரியாது. உங்களை நான் பார்த்தது கூட இல்லை, ஆனால் கர்த்தராகிய இயேசு

கிறிஸ்து உங்களை சுகமாக்குகிறார். நீங்கள் இருவரும் குணமாகி விட்டீர்கள். ஆமென்.

பித்தப்பை கோளாறினால் அவதியுறும் ஒரு மனிதனிடம் அந்த ஒளி இப்பொழுது செல்வதை நான் காண்கிறேன். ஐயா, உங்கள் பெயர் கிளாரன்ஸ், கிராண்ட் பிரெயிரீ என்றழைக்கப்படும் இடத்தி லிருந்து நீங்கள் வருகிறீர்கள். அது சரியே, அது சரிதானே? ஆம், உங்கள் பித்தப்பை கோளாறு முடிந்துவிட்டது ஐயா. நீங்கள் வீடு சென்று சுகமாயிருக்கலாம். ஆமென்.

15. "சகோதரன் பிரன்ஹாம், நீங்கள் அந்த மனிதனை பெயர்ச் சொல்லி அழைத்தீரே" என்று நீங்கள் கூறலாம். இயேசு கிறிஸ்து ஒரு மாம்ச சரீரத்தில் இங்கே இருந்த போது சீமோனிடம், அவனுடைய பெயர் சீமோன் என்றும்,

அவனுடைய தகப்பனின் பெயர் யோனா என்றும், இனிமேல் அவன் பேதுரு என்றழைக்கப்படுவான் என்றும் கூறினா ரல்லவா? சரிதான்! இன்றைக்கும் அவர் அதே விதமாகத்தான் இருக்கின்றார். ஆமென்.

உயர் இரத்த அழுத்தத்தினால் அவதி யுறுகின்ற ஒரு பெண்ணின் மேல் அந்த அக்கினி ஸ்தம்பம் இப்பொழுது இருக் கின்றது. உங்கள் பெயர் திருமதி ஃபிஷ்ப்ரூக் (Mrs. Fishbrook) ஆகும், நீங்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர், 125வது என்று அழைக்கப்படுகின்ற தெருவில் நீங்கள் வசிக்கின்றீர்கள், உங்கள் வீட்டு எண் 13104 ஆகும். அது உண் மையானால் உங்கள் கரத்தையுயர்த் துங்கள். சரி, வீடு செல்லுங்கள், பெண்ணே,

நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள். இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்குகிறார்.

ஓ, நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு மக்களாகிய உங்களுக்கு நான் சவாலிடுகிறேன். தேவனை நோக்கிப் பாருங்கள், ஜீவியுங்கள் மற்றும் விசுவாசியுங்கள்! அந்த ஒளியானது இப்பொழுது இங்கே முன் வரிசையில் அமர்ந்திருக்கும் இந்த பெண்மணியின் மேலே வருகின்றது - செல்வி ஃபார் - உங்களுக்கு இருதயக் கோளாறு உள்ளது, அப்படித்தானே? தேவன் உங்களை சுகமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு பக்கத்தில் இருக்கும் உங்கள் தகப்பனாருக்கு ஆவிக்குரிய தொல்லைகள் இருக்கின்றன. நீங்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, நீங்கள் மாநிலங் களில் இருந்து வருகிறீர்கள், மலைகள் கொண்ட

ஒரு இடத்திலிருந்து வருகிறீர்கள், இது பென்சில்வேனியாவிலுள்ள, வாரன் என்னும் இடமாகும். அது சரியென்றால் உங்கள் கரத்தை உயர்த்துங்கள். நீங்கள் இருவரும் இப்பொழுதே சுகமாக்கப்பட்டு விட்டீர்கள். இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்குகிறார். ஆமென்.

இப்பொழுது நான் ஒன்றைச் செய்யப் போகிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் பேரில் தங்கள் இருதயங்களில் அக்கறையற்ற நிலையில் இருந்துவிட்ட ஒவ்வொருவரும், இன்றிரவு வெற்றியி லிருந்து தூரமான உள்ள எல்லாரும், எல்லா பாவிகளும், சற்று முன்னர் உங்களிடமாக தம்மைத் தாமே நிரூபித்த கிறிஸ்துவிடம் இப்பொழுது வாருங்கள். தங்கள் பாவக்கறைகளை போக்க விரும்பு கின்ற எல்லாரும் .... இயேசுகிறிஸ்து

வினிடம் முன்னே வாருங்கள் .... கிறிஸ்து இங்கே இருக்கின்றார்! அவர் இங்கிருக் கையில் இப்பொழுது முன்னே வாருங்கள். நீங்கள் அதைச் செய்வீர்களா? பாவியான நண்பரே, பின்மாற்றத்தில் இருப்பவரே, குளிர்ந்த, வெதுவெதுப்பான நிலையில் இருப்பவரே, அக்கறையற்றவர்களே வாருங்கள் மாடியில் உள்ளவர்ளே வாருங்கள். மரணத்தின் கூரை வெளியே எடுக்கின்ற இந்த காத்தராகிய இயேசுவை இப்பொழுது வந்து ஏற்றுக்கொள்ளத்தக்க தாக உங்களுக்கு ஒரு தருணத்தை நாங்கள் அளிக்கிறோம். நான் எதைக் குறித்துப் பேசுகிறேன் என்பதை நிச்சயமாக அறிந் துள்ளவனாக இருக்கிறேன். அவர் இங் கிருக்கிறார் என்பதை நிருபிக்கத்தக்கதாக இந்த காரியங்களை நான் செய்ய அவர் விடமாட்டார். இந்த பாவக்கறைகள்

போக்கப்பட நீங்கள் விரும்புகிறீர்களா? ஒவ்வொருவராக இப்பொழுது வாருங்கள்.

16. கனடா தேசத்தவரே உங்களுக்கு என்ன ஆயிற்று? என்ன ஆயிற்று? பழமைவாதியாக இருப்பது நல்ல ஒரு காரியம் தான், ஆனால் மிக விறைப்பாக இருக்காதீர்கள். ஆவியானவர் துக்கப்பட்டு உங்களிடமிருந்து கடந்து போகாதபடிக்கு பாருங்கள், ஒரு எழுப்புதலும் உங்களுக்கு இருக்காது. நான் சொல்வதைக் கேளுங்கள். நான் உங்களிடம் கர்த்தருடைய நாமத்தில் பேசுகிறேன்! உங்கள் மத்தியில் இருக்கும் அந்த இணங்காத சுபாவத்தை, விறைப் பான தன்மையை உடைத்துப் போடுங்கள்; முழங்காலில் நில்லுங்கள்; உங்களுக்கு மனந்திரும்புதல் தேவைபடுகின்றது என் பதை நீங்கள் அறிவீர்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் உங்களிடம்

பேசுகிறேன். உங்களுக்கு ஒரு எழுப்புதல் வேண்டுமென்றால் உங்கள் இருதயத்தை தேவனுக்கென்று அனல் கொள்ளும் படிக்குச் செய்யுங்கள். நான் தேவனுடைய ஊழியக்காரன், தேவனுடைய தீர்க்கதரிசி, இந்த பீடத்தைச் சுற்றி நிற்கவேண்டி யிருக்கும் சிலர் உங்கள் மத்தியில் இருக் கின்றனர். நீங்கள் உங்களை தேவனுடன் சரி செய்துக்கொள்வது நல்லதாகயிருக்கும். ஏனெனில், நீங்கள் கூச்சலிட்டாலும் உங்க ளாலே இதைக் காணமுடியாத ஒரு மணி நேரமானது வருகின்றது. இது ''கர்த்தர் உரைக்கிறதாவது!''

அது தேவன் பேசுவதாகும். இந்த பீடத்தண்டை வருகின்ற வழியைத் தெரிந்துகொள்ளுங்கள்; அலட்சியமாயிருக் கிறவர்களே - உங்களுக்கு அவமானம்! பரிசுத்த ஆவியானவர் வந்து இந்த

காரியங்களைச் செய்கையில், அவர் சரியாக உங்கள் மத்தியில் கிரியை செய்து கொண்டிருக்கிறார் - ஆனால் நீங்களோ குளிரில் உறைந்து போய் இறந்தவர்களைப் போல இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கி றீர்களே! உங்கள் இருக்கையிலிருந்து எழுந்து பீடத்தண்டை வாருங்கள். மனந் திரும்புங்கள் அல்லது அழிந்து போங்கள். நான் ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் இதை கூற வேண்டுமென்று ஏதோ ஒன்று என்னிடம் கூறிக்கொண்டிருக்கிறது. நான் உங்களுக்கு ஒரு எச்சரிப்பை விடுக்கிறேன், ஒருக்கால் இது உங்களுடைய கடைசி எச்சரிப்பாகவும் இருக்கலாம்! மனந்திரும் புங்கள்! நீங்கள் எந்த சபையை சேர்ந் திருந்தாலும் எனக்கு கவலையில்லை - நீங்கள் மனந்திரும்பாமல், தேவனுடைய

அன்பானது உங்கள் இருதயங்களில் இல்லையென்றால், நீங்கள் பாவிகளாக நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக் கிறீர்கள்! இது "கர்த்தர் உரைக்கிறதாவது''

ஆவிகளைப் பகுத்தறிந்து அவர்க ளுடைய நிலைமைகளை அவர்களுக்கு கூறுகின்ற அந்த அதே தேவனே, சரியாக இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்றார். நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பேசுகிறேன். பீடத்தண்டை பறந்தோடுங் கள், உங்களைக் குறித்த காரியத்தை தேவன் முற்றுப்பெறச் செய்யு முன்னர் உங்களுடைய மனந்திரும்புதலுக்கு சீக்கர மாக வாருங்கள், இல்லையெனில் நீங்கள் என்றென்றுமாக தண்டனைக்குள்ளாகி விடு வீர்கள்! இது, இப்பொழுது நம்முடைய மத்தியில் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது!''

17. இது மூலம் மழுப்பலின்றி கூறப் படுகிறது, அது அவரே ஆகும் - என்னால் அதை உரைக்க மாத்திரமே முடியும். எந்த ஒன்றிற்கும் நான் இந்த காரியங்களை சுயமாகவே பேசுவதில்லை என்பதை தேவ னறிவார். ஏதோ ஒன்று என்னை இறுகப் பிடித்து அதைக் கூறும்படிக்கு என்னிடம் கூறினது. நான் தேவனுக்கு கீழ்ப்படிய மாத்திரமே செய்கிறேன். இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே என்னும் பாடலின் மற்றொரு சரணத்தை நாம் பாடுகையில், நீங்கள் வருவது நலமாயிருக்கும். ஓ, இந்த தேசத்திற்கு ஒரு உடைக்கப்படுதல் தேவைபடுகிறது. நீங்கள் மறுபடியுமாக உருவாக்கப்படுமுன்னர் உங்களுக்கு ஒரு உடைக்கப்படுதல் தேவைப்படுகிறது. நீங்கள் சபைக்கு நீண்ட காலமாக சென்று அதன் காரணமாக

இதைக் குறித்து விறைப்பான அணுகு முறையை கையாண்டு, பாசியால் மூடப் பட்ட நிலையில் இருக்கின்றவர்களாக ஆகிவிட்டீர்கள். உங்களுக்கு ஒரு மனந் திரும்புதல் தேவைப்படுகிறது, தேவ னுடைய அன்பு உங்கள் இருதயத்தில் கொண்டிருக்கும் பழங்கால பாணியைக் கொண்ட அனுபவம் உங்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே நீங்கள் நினை வில் கொள்ளுங்கள் - நீங்கள் சாவுக்குரிய மனிதனாக இருக்கும் வரைக்கும் என் னுடைய சத்தமானது உங்களை சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கும்! அது உண்மையே! நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பேசுகிறேன். ஆமென்.

இன்னொரு காரியத்தை நான் கூறட் டும். நீங்கள் ஒருவருக்கெதிராக ஏதாவ தொரு காரியத்தை கொண்டிருந்தால்,

சரியாக இப்பொழுதே நீங்கள் அதை சரி செய்து கொள்வது நல்லது! அது இந்த கட்டிடத்தில் இருட்டைக் கொண்டு வரு கிறது, "என் ஆவி என்றைக்கும் மனுஷ னோடே போராடுவதில்லை!" என் இரு தயம் தேவனுக்கென்று அனல் கொள்ளாம லிருக்குமென்றால் நான் உடனடியாக என்னுடைய இருக்கையிலிருந்து எழுந் திருப்பேன் - நான் படத்தை நோக்கி நடந்து செல்வேன்.

நண்பர்களே, இந்த விதமாக நடப்பதை நான் அநேக ஆண்டுகளாக காணவில்லை. சில நிமிடங்களுக்கு முன் என் மீது வந்த இந்த விதமான ஒரு உணர்வை இதற்கு முன்னர் நான் பெறவேயில்லை. இந்த கட்டிடம் முழுவதுமாக கறுத்த ஒன்றைப் போலக் காணப்பட்ட ஒன்று அசைந்து கொண்டிருந்ததை நான் கண்ட போது

ஏதோ ஒன்று என் மீது வேகமாக வந்தது. ஆகவே அவைகள் என்னுடைய வார்த் தைகள் அல்ல, அல்லது நான் நிர்ணயம் பண்ணி பேசுகிற வார்த்தைகள் அல்ல. அது உண்மை என்பதை தேவன் அறிவார்.

ஏதோ தவறாக உள்ளது, என்பதை நினைவில் கொள்ளுங்கள். கவனியுங்கள் நண்பர்களே, நான் ஒன்றின் பேரில் சமரசம் செய்பவன் அல்ல, அல்லது வழவழ வென்று நிலையற்றவனும் அல்ல. நான் சத்தியத்தை கூறுகிறேன், நான் சத்தியத் தைத் தான் கூறுகிறேன் என்று தேவன் உறுதிபடுத்துகிறார். நீங்கள் சபை என்றாகி விடுவதால், நீங்கள் கிறிஸ்துவை வெளியே விட்டு விடுகிறீர்கள்! உங்க ளுடைய உறுதியான நம்பிக்கையை காண் பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி கொள் கிறேன். இந்த பீடமானது உத்தமமான

இருதயங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது - தேவன் அசைவாடுகிறார் என்பதை இது காண்பிக்கிறது. இப்பொழுது நாமெல்லாரு மாக சேர்ந்து ஜெபித்து அவர் நம் ஜெபத்தை கேட்கையில் நாம் நம்முடைய கர்த்தரை நோக்கி கூப்பிடுவோம். தேவனே எட்மன்டன் நகரத்துக்கு ஒரு எழுப்புதலைத் தாரும், நீங்கள்.... நாம் தேவனை நோக்கி கூப்பிடுவோமாக. இதை நினைவில் கொள் ளுங்கள். ஆம் நமக்கு ஒரு எழுப்புதல் தேவையாயிருக்கிறது, நியாயத்தீர்ப்பின் நாவி உங்களுடைய இரத்தமானது என் மீது இராது. இயேசுவின் நாமத்தில் நான் பேசுகிறேன்! இன்னொரு பெந்தெ கொஸ்தே இரவைக் காண நீங்கள் விரும் புகிறீர்களா? அது உங்களைப் பொறுத்தது. பெந்தெகொஸ்தேயை அருளுபவராகிய பரிசுத்த ஆவியானவர் இங்கிருக்கிறார்,

ஜெபியுங்கள், தேவனை நோக்கிக் கூப் பிடுங்கள்!

ஓ, நித்திய தேவனே, இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் நான் வருகிறேன். இப் பொழுது பிசாசானவன் கடிந்து கொள்ளப் பட்டிருக்கிறான், வியாதி சுகமாக்கப்பட் டுள்ளது, சுவிசேஷமானது பிரசங்கிக்கப் பட்டிருக்கின்றது, இந்த கண்காட்சி கட்டிடத் திலிருந்து ஒவ்வொரு பிசாசின் வல்லமை யையும் தேவனுடைய வல்லமையானது அப்புறப்படுத்தினது. ஓ கர்த்தாவே, தடுப்பு சுவராக உள்ள ஒவ்வொரு நடுச்சுவற்றை உடைத்தருளும், ஸ்தாபன கொள்கைகளை கிழித்தெறியும், அந்த விதமான கோட் பாடுகளை கிழித்தெரியும், ஒரு பலத்த காற்றாக பரிசுத்த ஆவி தாமே ஒவ்வொரு இருதயத்திற்கும் இப்பொழுது வருவதாக. இந்த மிகப் பெரிய ஜனக்கூட்டத்தை

பரிசுத்த ஆவியின் ஒளியூட்டும் வல்லமை யால் நிரப்பி, ஒவ்வொரு இருதயத்தையும் தீ மூட்டும். ஓ, நித்திய தேவனே, மனிதருடைய இருதயங்களை அறிந்து, தம்மைத் தாமே ஒரு ஜுவாலிக்கும் அக்கினியாக வெளிப்படுத்துபவரே, ஒவ் வொரு பாவத்தையும் மன்னியும், தப்பி தங்களை எடுத்துப் போடும் இந்த மக்களை வெண்மையும் சுத்தமாகவும் செய்யும், இதை அருளும் கர்த்தாவே. கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக. ஜனங் களே, உங்கள் கைகளையுயர்த் துங்கள், அவருக்கு துதியை ஏறெடுங்கள் .... அவருக்கு துதி செலுத்துங்கள்!

# பதினோராவது கட்டளை



சகோ.வில்லியம் பிரன்ஹாம்